# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## தேவனுடைய அன்பினாலும் வல்லமையினாலும் நிறைந்துள்ள மூவான் மதுர தண்ணீர் இடம்!

**வேதாகமத்தின் நிஜத்தன்மை நிரூபிக்கப்பட்ட சுகமளிக்கும் கிரியைகள் வெளிப்படுத்தப்பட்ட, அநேக மக்கள் பார்க்க வர விரும்பும் இடம்**




கடந்த பதினைந்து ஆண்டுகளாக மூவான் மதுர தண்ணீர் மூலமாக திருச்சபை அங்கத்தினர்கள் அநேக சுகமாகுதலின் கிரியைகளையும் பதில்களையும் பெற்றனுபவித்துள்ளனர். தேவனுடைய வல்லமையின் இடத்திலே அப்பேற்பட்ட கிரியைகளை அனுபவிக்க விரும்பிய அநேக மக்களுள் திரு. டேவிட் வெய்ஸ்மான், பெருவின் முன்னாள் துணை அதிபர் மற்றும் அவரது மனைவி; அறிவர். அர்மான்டோ பினெடா, WCDN US கிளையின் இயக்குனர் (உலகளாவிய கிறிஸ்தவ மருத்துவ குழுமம்) மற்றும் திரு. செர்கே வெல்போவெட்ஸ், 'இன் விக்டோரி'யின் தலைவர் (ரஷ்ய மொழி பேசும் மக்களுக்கான ஒரு முன்னணி கிறிஸ்தவ வாயில் இணையதளம்), ஆகியோர் அவ்விடத்தை வந்து பார்த்தனர். (வலது, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள், மூவான் மதுர தண்ணீர் ஞாபக சின்னம் திரை நீக்கம் செய்யும் சடங்கில் ஜெபிக்கிறார்).

"ஞாயிறு காலை ஆராதனைக்குப் பின்னர் நாங்கள் கிணறு அமைந்துள்ள மலைப் பகுதிக்கு சென்றோம். தேவனுக்கு நாங்கள் துதியையும் நன்றியின் தூபத்தையும் ஏறெடுத்தோம். அதன் பின்னர் இரண்டு கரங்களையும் சேர்த்து, வெளியே பீச்சியடித்த நிலத்தடி தண்ணீரை சுவைத்தோம். அதை முதன் முதலாக சுவைத்த அங்கத்தினர்களுள், ஒருவர், 'போதகர் கிம்! இது இனிக்கிறது! (குடிக்கக்கூடியதாய் உள்ளது)' என்றார். பின்னர் அதை சுவைத்த அங்கத்தினர்கள் குடிக்க கசப்பும் உப்புமாய் இருந்த தண்ணீர் இப்போது நல்ல சுவையாக உள்ளது என்றனர். நாங்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி மகிழ்ச்சியில் குதூகலித்தோம்! அந்த க்ஷணத்தை எங்களால் ஒருபோதும் மறக்க டியாது."

மூவான் மான்மின் திருச்சபைக்கு ஊழியம் செய்யும் போதகர் மியாங்சூல் கிம் மார்ச் 5, 2000 அன்று பதினைந்து வருடங்களுக்கு முன்பு என்ன நடந்ததென்று இன்னமும் நினைவுகூருகிறார். மூவான் மான்மின் திருச்சபை தற்போது உள்ள இடத்திற்கு தனது ஆலயத்தை பிப்ரவரி 1999ல் இடப்பெயர்ப்பு செய்தது. மூவானில் அமைந்துள்ள தீவிலே திருச்சபையின் கட்டடமும் அதின் சுற்றுப்புறமும் 23, 140 சதுர அடிக்கு மேலாக இருந்தது. அதற்குப் பல கூடுதலான வசதிகளும் அழகான பார்வையும் இருந்தது. இருப்பினும், அங்கு எதிர்பாராத பிரச்சனை இருந்தது; அதுதான் குடிநீர் பற்றாக்குறை.

அவர்கள் கிணறு தோண்டி நிலத்தடி தண்ணீரை அடைந்தனர். ஆனால் அந்தத் தண்ணீரும் குடிக்க முடியாத அளவு உப்பாய் இருந்தது. அவர்கள் நீரைப் பெற மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ள அயலகத்தார்களிடத்தில் நீர்க் குழாய்களை இணைத்தனர். ஆனால் அது கடினமான வேலையாக இருந்தது. போதகர் கிம் மற்றும் திருச்சபை அங்கத்தினர்களும் அநுதினமும் குடி தண்ணீருக்காக ஜெபித்தார்கள். ஒரு நாள் அவர்கள் மனதில் மின்னல் போல ஒரு எண்ணம் உதித்தது.

அது மோசேயின் மூலமாக தேவன் நிகழ்த்திய கிரியைகள். அதாவது, மாராவின் கசந்த நீர் மோசேயின் மூலமாக மதுரமான தண்ணீராய் மாறியது (யாத்திராகமம் 15:25). அங்கத்தினர்கள் ஏற்கனவே தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் மூலம் எண்ணற்ற அற்புத அடையாளங்கள் மற்றும் தேவனுடைய வல்லமையான கிரியைகள் வெளிப்படுவதை கண்டுள்ளனர். ஆக அங்கு இருந்த உப்புத் தண்ணீர் தேவனுடைய கிரியைகளால் மதுர தண்ணீராய் மாறக்கூடும் என்பதை அவர்களால் விசுவாசிக்க முடிந்தது.

போதகர் கிம் மற்றும் அங்கத்தினர்கள் அதற்காக ஊக்கமாக ஜெபித்தனர். தங்கள் விசுவாசத்தையும்கூட "உப்புத் தண்ணீர் மதுரமான தண்ணீராய் மாற்றிவிட்டது" என்று ஒருவருடன் ஒருவர் சொல்லி வாழ்த்துவதால் அறிக்கை செய்தனர். பிப்ரவரி 2000தில், அறிவர். லீ அவர்கள் அவர் தம் மலை ஜெப வீட்டில் ஆறு வாரங்களாக ஜெபித்துக் கொண்டிருந்தார். இக்கால கட்டத்தில் மூவான் மான்மின் திருச்சபை அங்கத்தினர்கள் தொடர்ச்சியான உபவாசம் மற்றும் பொருத்தனை ஜெபங்களை ஏறெடுத்து பதில்களைப் பெற்றுக் கொள்ளும்படி தங்கள் பாத்திரங்களை ஆயத்தம் செய்தனர்.

மார்ச் துவக்கத்தில், மலை ஜெபத்தில் இருந்து திரும்பி வந்த தலைமைப் போதகர் அறிவர். லீ அவர்கள் அதற்காக ஜெபித்தார். உப்புத் தண்ணீர் இறுதியாக மதுர தண்ணீராய் மாறியது. அவர்கள் மக்களால் அதைக் குடிக்க முடிகிறது எனவும், அவர்கள் அதை எடுத்து விசுவாசத்தோடு அதை பயன்படுத்தும்போது அவர்களால் சுகத்தையும் அவர்களது ஜெபங்களுக்கு பதில்களையும் பெற்றுக்கொள்ள முடிகிறது எனவும் கண்டறிந்தனர். ஆதலால் அந்த தண்ணீர் கொரியாவிற்கு உள்ளும் புறமும் எண்ணற்ற அங்கத்தினர்களாலும், மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது (இதைப் பற்றிய சாட்சிகள் பக்கம் 4ல் உள்ளன).

2007லிலே, அமெரிக்க ஐக்கியத்தின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் நடத்தப்பட்ட பரிசோதனை மற்றும் செய்முறை ஆராய்ச்சியின் மூலமாக தாதுபொருட்கள், கன உலோகங்கள், இரசாயன கழிவுகள், சரும பிரதிகிரியை மற்றும் விஷத்தன்மை பரீட்சையில் மூவான் மதுர தண்ணீர் பாதுகாப்பானதாகவும், சிறந்ததாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. மே 2010ல், மூவான் மதுர தண்ணீர் FDAவின் கூடுதல் சோதனைகளில் தேர்ச்சி பெற்று USAக்கு ஏற்றுமதி செய்யப்படும் தகுதியைப் பெற்றது. 2013ல் மூவான் மதுர தண்ணீரின் வியாபாரச் சின்னம் USன் தனி உரிமை மற்றும் வியாபாரச் சின்ன அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

மூவான்–க்கன், ஜியோனாம் மாகாணத்தில் உள்ள மூவான் மதுர தண்ணீர் இடம் கொரியாவிற்கு உள்ளும் புறமும் இருந்து வரும் பல பார்வையாளர்களால் தொடர்ந்து பார்வையிடப்படுகிறது. வேதாகமத்தின் நிஜத்தன்மை நிரூபிக்கப்பட்ட இடத்தை அவர்கள் பார்க்க வேண்டும் என விரும்புவதால் அவர்கள் வருகின்றனர். மேலும் சியோலில் உள்ள மான்மின் மத்திய சபையில் உள்ள மூவான் மதுர தண்ணீரின் மீன் பண்ணை அநேகருடைய கவனத்தை ஈர்த்துள்ளது. அங்கு மூவான் மதுர தண்ணீர் மீன் பண்ணையில் கடல் தண்ணீர் மீன்களும் நல்ல தண்ணீர் மீன்களும் சேர்ந்து வாழ்வதை அவர்களால் பார்க்க முடிகிறது.

மார்ச் 5, 2015 அன்று மூவான் மதுர தண்ணீரின் 15வது ஆண்டுவிழா. அக்கொண்டாட்ட ஆராதனையில் சியோல் பெண்கள் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவரும், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த சபையின் உப தலைவருமான போதகர் எஸ்தர். K. ச்சங் அவர்கள் செய்தியளித்தார். தேவனை மகிமைப்படுத்தும்படி கொண்டாட்ட நிகழ்வும் இருந்தது. மூவான் மதுர தண்ணீரை பொறுத்தவரையில் ஒருவர் முடிவு பரியந்தம் விசுவாசித்து, கூடாதது ஏதுமில்லாத தேவனை முற்றிலுமாய் சார்ந்து கொள்வாரேயானால் அவர் நம்புகிற காரியத்தை அவர் பெற்றுக் கொள்வார்.

# "உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருக்கிறார்"



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

"நான் உனக்கு கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (யோசுவா 1:9)

யாத்திராகமத்திற்கு பின்னதாக, செங்கடல் இரண்டாக பிரிதல் மற்றும் பத்து வாதைகள் போன்ற தேவனுடைய வல்லமையான கிரியைகள் பலவற்றை இஸ்ரவேலர்கள் கண்டனர். இருப்பினும், அவர்கள் ஆவிக்குரிய விசுவாசத்தை காண்பிக்கவில்லை. அதன் விளைவாக, அவர்களால் தேவன் அளித்த ஆசீர்வாதங்களைப் பெற முடியாமல் வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகளாக வாழ வேண்டியிருந்தது.

இப்போது முதல் தலைமுறையினர் அனைவரும் மரித்துப்போய் விட்டனர். யோசுவாவும், காலேபும் மற்றும் இரண்டாம் தலைமுறையினர் மட்டுமே கானான் தேசத்திற்குள் நுழையுமளவில் இருந்தனர். தேசத்திற்குள் நுழைவதற்கு முன்னதாக மோசே ஜனங்களை கூட்டி பிரசங்கித்தார். அவர்கள் செய்ய வேண்டும் என்று மோசே எதை வலியுறுத்தினார் என்றும் யோசுவா கானான் தேசத்தை எப்படி பிடித்தார் என்றும் இப்போது நாம் பார்ப்போம்.

## 1. தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள மோசே இஸ்ரவேலர்களை வலியுறுத்தினார்

மோசே தனது மரணத்திற்குப் பின்னர் கானான் தேசத்தை சுதந்தரிக்க வேண்டி இருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிக பாசத்துடன் தனது இறுதி ஆலோசனையை கொடுத்துக் கொண்டு இருந்தார். அச் செய்தியின் முழு பொருளடக்கங்களும், உபாகமப் புத்தகத்தில் உள்ளன. முக்கிய குறிப்பு என்னவென்றால் அவர்கள் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும் என்பதே.

உபாகமம் 5:32–33ல், "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்ய சாவதானமாயிருங்கள்; வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்பீர்களாக. நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்து சுகித்து நீடித்திருக்கும்படி, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு விதித்த வழிகளெல்லாவற்றிலும் நடக்கக்கடவீர்கள்" என்று வாசிக்கிறோம்.

நாம் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டால் ஆசீர்வதிக்கப்படுவோம், இல்லையெனில் சபிக்கப்படுவோம் என்ற கருப்பொருள் உபாகமப் புத்தகத்தில் திரும்ப திரும்ப சொல்லப்பட்டிருப்பதை பார்க்கலாம். இது ஜனங்களைப் பயமுறுத்துவதற்கோ அல்லது அவர்களைப் பாரப்படுத்துவதற்கோ கொடுக்கப்படவில்லை.

உபாகமம் 10:13, "நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?" இது அவர்களுக்கு மெய்யான சந்தோஷத்தின் வழியைச் சொல்கிற செய்தியாயிருக்கிறது.

ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து, இந்த உலகம் எதிராளியான பிசாசின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிட்டது தேவனில் விசுவாசம் இல்லாதவர்கள் சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் சோதனைகளிலும், பரீட்சைகளிலும் கஷ்டப்படும்படி நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகையால், நாம் ஆசீர்வாதமான வாழ்வு வாழ்வதற்கு நாம் இருளிலிருந்து விலகி ஒளியாயிருக்கிற தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ள வேண்டும். தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாதவர்கள் இருளிலே வாழ்பவர்களாக காணப்படுவர். அவர்கள் எதிராளியாகிய பிசாசுக்கு உரியவர்கள். ஆகவே, எதிராளியான பிசாசு அவர்கள் மீது பரீட்சைகளையும் சோதனைகளையும் கொண்டு வரும்போது, தேவனால் அவர்களை பாதுகாக்க முடியாது.

அதனால்தான் தேவன் வேதாகமத்தின் 66 புத்தகங்கள் முழுவதிலும் நாம் இருளில் வாழக்கூடாது. ஆனால் நாம் ஒளியில் வாழ வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். மோசே இந்த உண்மையை மிக நன்கு அறிந்திருந்தபடியால் இஸ்ரவேலர்கள் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளும்படி பல முறை உறிவுறுத்தியுள்ளார்.

கானானைப் பார்க்கக் கூடிய யோர்தானுக்கு கிழக்காக மோசே தனது 120 வருட ஆயுளுக்கு பிறகு தேவனோடு இருக்கும்படி சென்றுவிட்டார். அவருடைய விசுவாசத்தால் மட்டுமே அவர் கானானுக்குள் நுழைந்திருக்க முடியும். ஆனால் யாத்திராகமத்தின் முதலாம் தலைமுறையினருக்கு தலைவனாகப் பொறுப்பெடுத்திருந்ததால் அவரால் கானானுக்குள் நுழைய முடியவில்லை.

## 2. இரண்டாம் தலைமுறையினர் மோசேக்கு அடுத்த தலைவனாகிய யோசுவாவுக்கு கீழ்ப்படிவதற்கு பொருத்தனை செய்தனர்

மோசே மரித்த பின்னர் தேவன் நூனின் குமாரனாகிய யோசுவாவை இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்துவதற்கு தெரிந்தெடுத்தார். யோசுவா பன்னிரெண்டு உளவாளிகளில் ஒருவனாயிருந்தான். அவன் நல் விசுவாச அறிக்கையினால் தேவனை மகிமைப்படுத்தினான். அவன் எப்போதும் மோசேயை அவனுடைய ஊழியக்காரனாக பின்பற்றினான். மோசே நாற்பது நாட்கள் மலையில் பத்துக் கட்டளைகளைப் பெறும்படியாக ஜெபித்துக் கொண்டு இருந்தபோதும், அவன் மோசேயை விட்டு விலகவில்லை.

அவனுக்கு அவனுடைய இருதயத்தில் மிகப் பெரிய பாரம் இருந்திருக்க வேண்டும். காரணம், மாபெரும் தலைவன் அவனோடு இனி இல்லை. அவன் தன்னுடைய ஆசானின் பொறுப்பை இப்போது எடுக்க வேண்டி இருந்தது. அநேக மக்களுக்காக தலைமைத்துவமும் உத்தரவாதமும் எடுப்பது எவ்வளவு கடினமும் பாரமுமானது என்பதை அவன் அறிந்திருந்தான். நாற்பது ஆண்டுகளாக மற்ற யாரைப் பார்க்கிலும் யோசுவா மோசேயின் கண்ணீரையும் வேதனையையும் கண்டவன்.

தேவன் அவனுடைய இருதயத்தை அறிந்திருந்தபடியால், யோசுவாவிடத்தில் "பலங்கொண்டு திடமனதாயிரு" (யோசுவா 1:5–6) என்று கூறி ஊக்கப்படுத்துகிறார். மேலும் யோசுவாவோடு கூட இருந்த இஸ்ரவேலர்களும் யாத்திராகமத்தின் முதல் தலைமுறையினரிலிருந்து வித்தியாசமானவர்களாய் இருந்தனர்.

இரண்டாம் தலைமுறையினர் தேவனுடைய வார்த்தையால் வளர்க்கப்பட்டனர். தேவனுடைய வல்லமையான கிரியைகள் பலவற்றைக் கண்டுள்ளனர். மேலும், அவர்கள் ஏன் அவர்களது பெற்றோர்களால் கானான் தேசத்துக்குள் போக முடியவில்லை என்றும், ஏன் நாற்பது ஆண்டுகளாக வனாந்திரத்தில் சுற்றித் திரிய வேண்டி இருந்தது என்ற காரணத்தை அவர்கள் தங்கள் இருதயங்களில் செதுக்கி வைத்தார்கள். இப்போது, அவர்கள் தேவனுக்கும் அவர்கள் தலைவருக்கும் உண்மையான விசுவாசத்தோடு கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாயுள்ளனர்.

"நீர் எங்களுக்குக் கட்டளையிடும் சகல காரியத்திலும் உம்முடைய சொல்லைக் கேளாமல், உம்முடைய வாக்குக்கு முரட்டாட்டம்பண்ணுகிற எவனும் கொலை செய்யப்படக்கடவன்; பலங்கொண்டு திடமனதாய் மாத்திரம் இரும்" என்றார்கள் (யோசுவா 1:18). அவர்கள் யோசுவாவுக்கு நிபந்தனையில்லாமல் கீழ்ப்படிய பொருத்தனை செய்தார்கள்.

## 3. ராகாப் என்னும் வேசி தேவன்மீதான விசுவாசத்தால் உளவாளிகளை ஒழித்துவைத்து, ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டாள்

அவர்கள் கானான் தேசத்திற்குள்ளாக போக முதலாவது பிடிக்க வேண்டிய இடம் எரிகோ. அவர்கள் எரிகோவுக்கு முன்னேறுவதற்கு முன்னதாக இரண்டு உளவாளிகள் பட்டணத்தைக் குறித்து அறிந்துக்கொண்டனர்.

எரிகோ பட்டணம் அக்காலத்தில் சிறந்த தனித்தன்மை வாய்ந்தது. முக்கால்வாசி பட்டணங்கள் ஒரே ஒரு சுவர் உள்ளதாயிருந்தன. ஆனால் எரிகோ இரண்டு சுவர்களால் ஆனது. அதனால் அது மிக பலமுள்ளதாயிருந்தது. குறிப்பாக எரிகோவிலிருந்த மக்கள் மிகவும் விளிப்புள்ளவர்களாக முன்னெச்சரிக்கையுள்ளவர்களாக இருந்தனர். இஸ்ரவேலர்களால் வரும் தாக்குதலிலிருந்து தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள முயற்சித்தனர். ஒரு நாள் எரிகோவின் ராஜா, உளவாளிகள் அவனது நகரத்திற்குள் வந்துவிட்டதாக கேள்விப்பட்டான். அவன் தனது வீரர்களைக் கொண்டு அவர்களைத் தேடினான். உளவாளிகள் பிடிபடக்கூடிய நிலையில் இருந்தனர்.

இந்நேரத்தில், தேவன் முற்றும் எதிர்பாராத உதவி கரத்தை நீட்டினார். ராகாப் என்னும் வேசியின் வீட்டில் இந்த உளவாளிகள் தங்கி இருந்தனர். அவள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்த ஒரு புற ஜாதி. ஆனால் அவள் உளவாளிகளை ஒழித்துவைத்து அவர்களுக்கு ஆச்சரியமான விசுவாச அறிக்கை செய்கிறாள். அவள் மேலே வானத்திலும் கீழே பூமியிலும் கர்த்தரே தெய்வம் என்றாள் (யோசுவா 2:9–11). அதனால் அவள் அந்த உளவாளிகளிடம் இஸ்ரவேலர்கள் எரிகோவைப் பிடிக்கும்போது அவள் தனது ஜீவனையும் தனது குடும்ப அங்கத்தினர்களுடைய ஜீவன்களையும் விட்டு விடும்படி கேட்டுக் கொண்டாள்.

இதன் காரணமாக, ராகாப் தனது உயிரையும் தனது குடும்பத்தினர்களுடைய உயிரையும் காத்துக் கொள்வதுமல்லாமல் இஸ்ரவேலர்களில் ஒருவனையும் திருமணம் செய்து கொண்டாள். தாவீதின் கொல்லு பாட்டனான போவாசை பெற்று மத்தேயு 1:5–6ல் இயேசுவின் வம்சாவழியில் பட்டியலிடப்பட்டிருக்கிறாள். மனிதர்களுடைய எண்ணங்களில் நாம் அவள் தன்னுடைய சொந்த ஜனங்களுக்கு துரோகம் செய்வதற்காக உளவாளிகளை ஒளித்து வைத்துவிட்டாள் என நினைக்கலாம். ஆனால் அவள் தேர்ந்தெடுத்தது ஒரு தேசத்தின் மேல் மற்றொரு தேசம் அல்ல, மாறாக சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகராகிய தேவனை தெரிந்தெடுத்தாள். இஸ்ரவேலர்களோடு தேவனுடைய அற்புத அடையாளங்கள் உடன் செல்கிறது என்று அவள் கேள்விப்பட்டபோது, நல்ல இருதயம் கொண்ட அவள் தேவனை அங்கீகரித்தாள். தேவன் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிறவரானபடியால் உண்மையுள்ள இருதயத்தோடு அவரைத் தேடி அவரைச் சார்ந்து கொள்கிறவர்களுக்கு அவர் கைவிடாமல் ஆசீர்வாதங்களை தருகிறார்.

## 4. விசுவாச அறிக்கையோடு தேவனை இரண்டு உளவாளிகள் பிரியப்படுத்தினார்கள்

ராகாப்பின் உதவியோடு உளவாளிகள் பட்டணத்திலிருந்து தப்பி மூன்று நாள் மலைகளில் தங்களை ஒளித்துக் கொண்டார்கள். அவர்கள் அதன்பின்னர் இஸ்ரவேலர்களுடைய பாளையத்திற்கு சென்றார்கள். அவர்கள் எதிர்மறையான மனப்பான்மையோடு ஏதும் சொல்லவில்லை. அவர்கள் தங்கள் விசுவாச கண்களால் கண்டவற்றை மட்டும் அறிக்கை செய்தார்கள். "கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; தேசத்தின் குடிகளெல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்துபோனார்கள் என்று அவனோடே சொன்னார்கள்" (யோசுவா 2:24).

ஒரே சூழ்நிலையில், ஒவ்வொரு நபர்களும் வித்தியாசமான வார்த்தைகள் சொல்லுவர். சில மக்கள் மற்றவர்களை மனமுடைந்துப் போகப் பண்ணுகிற, மன உளைச்சலாக்குகிற வார்த்தைகளைப் பேசுவர், மற்றும் சிலர் மற்றவர்களை உற்சாகப்படுத்துகிற ஆறுதல்படுத்துகிற வார்த்தைகளைப் பேசுவர். ஆகையால் நாம் தேவனை கனஈனப்படுத்துகிற அல்லது நல்லதல்லாத வார்த்தைகளைப் பேசக்கூடாது. நாம் விசுவாச அறிக்கை செய்து மற்றவர்களுக்குப் பெலன் கொடுக்க வேண்டும்.

நாம் உண்மையில் தேவனை விசுவாசித்தால் கூடாதது ஏதுமில்லை. பிரச்சனைகள்கூட தேவன் நம்மோடிருந்தால் செழிப்பாக மாறும். ஆகையால், நாம் எதிர்மறையாக "இது கூடாதது" அல்லது "இது மிகவும் கடினம்" என்பது போன்றவைகளை ஒருபோதும் சொல்லக்கூடாது. தேவன் நம்முடைய வார்த்தைகள், கிரியைகள் மற்றும் உள்ளான இருதயத்தைப் பார்த்து விசுவாசத்திற்கு ஏற்றபடி கிரியை செய்வார்.

ஆகையால், நாம் விசுவாசமுள்ள, நல்ல நேர்மறையான வார்த்தைகளைப் பேச வேண்டும். அதனால் நாம் மற்றவர்களிடத்தில் விசுவாசத்தை நாட்டி அவர்களை உற்சாப்படுத்தவும் கூடும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, யாத்திராகமத்தின் முதல் தலைமுறையினர் தேவனுடைய வல்லமையான கிரியைகள் பலவற்றைக் கண்டிருந்தாலும், அவர்களுக்கு விசுவாசம் இல்லாததால் நல்லதொரு அறிக்கை செய்யவில்லை. அதனால் அவர்களால் கானானுக்குள் செல்ல முடியவில்லை.

இருப்பினும், நீங்கள் வாசித்தபடி இரண்டாம் தலைமுறையினர் வித்தியாசமாயிருந்தார்கள். நீங்கள் தேவனை விசுவாசித்து கீழ்ப்படிவதின்மூலம் அவருடைய ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெற்று அவரை மகிமைப்படுத்தும்படியாக ஆண்டவருடைய நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**

**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**

**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**

**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**

**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# மாம்ச சிந்தை என்றால் என்ன?

## மாம்ச சிந்தைகள் தேவனுக்கு விரோதமான பகை

மனித மூளை 'ஞாபக பெட்டகம்' என்னும் மூளைச் செல்களை கொண்டிருக்கிறது. அவைகள் 'அறிவை' உள்வைத்து பாதுகாத்து மறுபடியும் கொண்டுவர முடியும். சேர்த்து வைக்கப்பட்ட 'அறிவை' மறுபடியும் உற்பத்தி செய்தல் 'சிந்தனை' ஆகும். இந்த ஞாபக கருவி சேர்த்து வைக்கப்பட்ட அறிவு மற்றும் மறு உற்பத்தி செய்கிற நிகழ்வு 'ஆத்துமாவை' உருவாக்குகிறது.

ஆத்துமாவின் கிரியைகள் இரண்டாக வகையறுக்கப்படுகிறது: 'ஆவிக்குரிய' கிரியை மற்றும் மாம்சத்திற்குரிய 'கிரியை'. 'ஆவிக்குரிய சிந்தை' என்பது இருதயத்தில் பண்படுத்தப்பட்ட சத்தியம். 'ஆத்துமாவின்' மேல் கட்டுப்பாட்டை செலுத்தும் வழியில் இயங்கும். அதனால் தேவன் ஆவிக்குரிய சிந்தையில் பிரியப்படுவார். மாறாக, 'மாம்ச சிந்தை' என்பது இருதயத்தில் உள்ள சத்தியமற்ற காரியங்கள் ஆத்துமாவின் கிரியைகள் மூலமாக வெளிவரும். இது இச்சையைப் பின்பற்றி இருதயத்தை கிளரும். இதைக் குறித்து தான் ரோமர் 8:7 சொல்கிறது, "...மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை."

## மாம்ச சிந்தையின் நடைமுறை உதாரணங்கள்

### 1. அவைகள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதிலிருந்து உங்களைத் தடைப்பண்ணும்

ஆவியாயிருக்கிற தேவனுடைய வார்த்தைதான் வேதாகமம். அது ஆவிக்குரிய உலகத்தைக் குறித்து விளக்குகிறது. வேதாகமத்தின் பல பகுதிகள் இந்த மாம்ச உலகத்தில் பெறப்பட்ட அறிவு, தீர்க்கங்கள் அல்லது தோற்றங்களை வைத்து புரிந்துக் கொள்ள முடியாது.

மாம்ச சிந்தையுள்ள மக்கள் இயேசுவை கன்னி மரியாள் பெற்றாள் அல்லது இயேசு கடலின் தண்ணீரின்மேல் நடந்தார் என்று கேள்விப் படும்போது அவர்கள் உடனடியாக தங்கள் அறிவை பயன்படுத்துவர். அவர்கள், 'எப்படி அவள் திருமணமாகாமல், புருஷனோடு இன்னும் சேராமல் இருக்கும்போது குழந்தையைப் பெறமுடியும்?' என்றும், 'அவர் உண்மையிலே கடல் தண்ணீரிலே நடந்தாரா? அவர் ஒருவேளை ஆழமில்லாத பகுதியிலே நடந்திருக்கலாம்' என்றும் நினைத்து, ப்பேற்பட்ட காரியங்களை சும்மா நம்ப மாட்டார்கள்.

### 2. காரியங்கள் உங்களுக்கு ஆதாயமில்லையென்றால் அவைகள் தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படியாதபடி செய்யும்


இயேசு கிறிஸ்துவை ஜனங்கள் ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியை அவர்கள் பெறும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கும். அவர்களால் தேவனுடைய வார்த்தையை புரிந்துக்கொள்ள முடியும். வார்த்தையில் விசுவாசம் அவர்களுக்கு அருளப்படும். அவர்கள் விசுவாசித்தாலும், அவர்கள் இன்னும் சில நேரங்கள் காரியங்கள் அவர்களுக்கு ஆதாயமில்லாமல் போகும்போது கீழ்ப்படியாமல் போய் விடுவர்.

உதாரணமாக, வேதாகமம் சொல்கிறது, "உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் வேலைக்காரனாய் இருக்கக்கடவன்." அது மற்றவர்களுடைய ஆதாயத்தைத் தேட வேண்டும் என்றும்கூட சொல்கிறது. ஆனால் சிலர், 'நான் அவர்களுக்கு சேவை செய்தால் அவர்கள் என்னை கீழ்த்தரமாய் பார்ப்பார்கள்' அல்லது 'நான் மற்றவர்களுடைய ஆதாயத்தை மட்டுமே தேடினால் நான் அதிகமாக இழந்துவிட மாட்டேனோ?' என்று நினைக்கலாம். இயல்பாக, இவ்வழியாக அவர்களால் தேவனுடைய பார்த்தைக்கு கீழ்ப்படிய முடியாது.

சேவை செய்பவர்கள் இழப்பினால் கஷ்டப்படுவார்கள் என்று ஜனங்கள் எண்ணுகின்றனர். ஆனால் தேவன் நிச்சயமாக தமது வார்த்தைக்கு உத்தரவாதம் தருகிறார். நாம் தேவனில் உள்ள விசுவாசத்தோடு நம்மை தாழ்த்தி மற்றவர்களுக்கு சேவை செய்யும்போது, நாம் மற்றவர்களால் அங்கீகரிக்கப்படும்படிக்கு அவர் நம்மை ஆசீர்வதித்து அவர்கள் நடுவே நம்மை தலையாக்குவார். இருப்பினும், மாம்ச சிந்தைகளோடு நம்மால் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய முடியாது. பின்னர் நம்மால் தேவனளித்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் முடியாது.

### 3. தேவனுடைய கிரியைகளை நீங்கள் அனுபவிக்கும் சாத்திய கூறுகளை அவைகள் வரம்பிற்குள்ளாக்கும்

நாம் மக்கள் பலர் தங்கள் வியாதிகளிலிருந்து சுகமாவதையும் அவர்கள் ஜெபங்களுக்கு பதில் பெறுவதையும் கண்டிருக்கிறோம்.



ரோமர்8:7ல், "எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" என்று வாசிக்கிறோம்.

இதன் காரணம் மாம்ச சிந்தை, மக்கள் தேவனைப் பிரியப்படுத்தும் ஆவிக்குரிய விசுவாசத்தைக் கொண்டிருப்பதிலிருந்து தடைப்பண்ணுகிறது. அது ஆசீர்வாதங்களையும் பதில்களையும் நிறுத்துகிறது. மேலும் அவைகள் ஆவிக்குள் செல்வதற்கு தடையாகவும் இருக்கின்றன.

இப்போது மாம்ச சிந்தைகள் என்றால் என்ன என்பதைப் பார்த்து நம்முடைய சிந்தைகளைப் பரிசோதிப்போம்.



இருப்பினும் நமக்குத்தானே பிரச்சனை இருக்கும்போது, நமக்கு மாம்ச சிந்தனைகள் இருந்தால், அதை ஜெபத்தின் மூலமாய் தீர்க்க போதுமான விசுவாசத்தை நாம் கொண்டிருக்க முடியாது. நாம் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாலும்கூட ஆவிக்குரிய விசுவாசம் நமக்கு அருளப்படமாட்டாது. அந்த விசுவாசத்தால் தேவனுடைய கிரியைக்கு நேராக வழிநடத்த முடியாது.

உதாரணமாக ஒரு சிறு மரத் துண்டு உங்கள் விரலுக்குள் புகுந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அதை உங்களால் வெளியே எடுக்க முடியவில்லை. உங்களில் சிலர், "இது வியாதியல்ல. அதனால் ஏன் மருத்துவமனைக்குப் போகக் கூடாது? "இது சாதாரண மருத்துவ சிகிச்சையால் வெளியே எடுக்கப்பட்டு விடும்" என்று நினைக்கலாம். இருப்பினும், நீங்கள் உங்கள் மனதை மாற்றி, ஆவிக்குரிய சிந்தையை கொண்டு "சிருஷ்டிகராகிய தேவன் கிரியை செய்தால், இதை அவர் செய்வதற்கு இது ஒன்றுமில்லை" என்று நினைத்தால் இது தேவனைப் பிரியப்படுத்தும். அவர் நீங்கள் விசுவாசித்தபடி கிரியைச் செய்வார்.

மேலே உள்ள உதாரணத்தில் இருப்பது போல, சில சூழ்நிலையில் நாம் விசுவாசத்தைக் காண்பிக்கலாம். ஆனால் மற்ற சூழ்நிலைகளில் நாம் விசுவாசத்தைக் காண்பியாமல் இருக்கலாம். ஒரு வேளை விசுவாசத்தை காண்பிக்க வேண்டும் என்று நினைக்க முடியாத நிலையில்கூட இருக்கலாம். அப்படியானால் நாம் அநேகருடைய நிலை களின் சாட்சிகள் பலவற்றை கேட்பதன் மூலமாக நாம் அப்படிப்பட்ட மாம்ச சிந்தைகளை அழிக்க முடியும். ஆக தேவனுடைய கிரியைகளைக் குறித்து நாம் தானே ஒரு வரம்பு வைக்கக் கூடாது. ஆனால் நமக்கு ஆவிக்குரிய சிந்தை இருக்க வேண்டும். 'இதுவும் தேவனால் பதிலளிக்கப்படும்' என்று விசுவாசித்தால் அப்போது கூடாதது ஒன்றுமில்லை.

### 4. நீங்கள் உங்களை நம்பக்கூடாதபடிக்கு அவைகள் எதிர்மறையான குறுகிய எண்ணங்களைக் கொண்டு வரும்

நீங்கள் தவறு செய்தால், அல்லது ஏதாவது குறைவுகளை கண்டறிந்தால் நீங்கள் தேவனுக்கு முன்பாக வருத்தப்படுவீர்கள். உங்கள் மனதும்கூட வலிக்கலாம். ஆனால் இந்நிலையிலும்கூட ஆவிக்குரிய சிந்தையுள்ள மக்கள், "என்னுடைய குறைவுகளை கண்டறிய உதவியதற்காக தேவனே உமக்கு நன்றி" என்று ஜெபிப்பர். அவர்கள் "நான் இதே தவறை இனி செய்யமாட்டேன். தேவனைப் பிரியப்படுத்தும்படி நான் சீக்கிரமாய் புதுப்பிக்கப்படுவேன்" என்று நினைத்து தங்களை ஊக்கப்படுத்திக் கொள்வர்.

மாறாக மாம்ச சிந்தனைகளோடு மக்கள், "நான் பல காரியங்களில் குறையாயிருக்கிறேன். தேவனால் என்னை நேசிக்க முடியாது" அல்லது "நான் கடினமாய் முயற்சித்தேன், எனினும் நான் மீண்டும் தவறு செய்துவிட்டேன். என்னால் ஒன்றுமே செய்ய முடியாது" என்று நினைப்பர். அவர்களையே அதைரியப்படுத்திக் கொண்டு அவர்கள் ஜெபிக்கமாட் டார்கள்; அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யமாட்டார்கள். அவர்கள் பங்குபெற வேண்டிய சில கூட்டங்களிலும்கூட அவர்கள் பங்குபெற மாட்டார்கள்.

இருப்பினும், ஆவிக்குரிய சிந்தையைப் பயன்படுத்துகிற மக்கள் அதே கஷ்டங்களில் இருந்தாலும் தங்களை மாற்றிக் கொள்வதற்கு கடுமையாக முயற்சிப்பர். ஆனால் மாம்ச சிந்தைகள் உள்ள மக்கள் இன்னும் ஆழமான எதிர்மறையான சிந்தைக்குள் சென்று, அதிகமாக அதைரியப்பட்டு இறுதியாக விட்டுவிடுவர்.

## தேவன் விரும்புகிற ஆவிக்குரிய சிந்தைகளை கொண்டிருக்க

ரோமர் 8:5–6 சொல்கிறது, "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்."

நாம் ஆவிக்குரிய காரியங்களில் நம்முடைய சிந்தையை பதிக்க முயற்சித்தாலும்கூட, நம்முடைய இருதயங்களில் பொய்கள் இருக்கு மேயானால், நம்மை மரணத்திற்கு நேராக வழிநடத்தும் மாம்ச சிந்தைகளை கொண்டிருப்பதை தவிர்க்க முடியாது. ஆகையால் நாம் எல்லா நேரமும் நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து பார்த்து, மாம்ச சிந்தைகளைக் களைந்துப்போட்டு சத்தியத்தை பின்பற்ற முயற்சித்து எப்போதும் ஆவிக்குரிய சிந்தைகளை கொண்டிருக்க வேண்டும்.

1தீமோத்தேயு 4:5 அவ்வாறு செய்வதற்கான வழியைக் கொண்டிருக்கிறது. "அது தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" என்று அது சொல்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையினால் நம்மை ஊக்கமாய் தரிப்பித்துக்கொண்டு, ஊக்கமாய் ஜெபித்து, அதினால் பொய்யான காரியங்களை முற்றிலுமாய் தூக்கி எறிய வேண்டும். அப்போது நமக்கு ஜீவனையும் சமாதானத்தையும் கொண்டு வருகிற ஆவிக்குரிய சிந்தைகளை கொண்டிருக்க முடியும். இறுதியாக நாம் தேவன் ஆயத்தம் செய்த பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற முடியும்.

# "மூவான் மதுர தண்ணீரின் வல்லமையின் மூலமாக நான் என் மனோ வாஞ்சையை பெற்றுக்கொண்டேன்"

மூவான் மதுர தண்ணீரில் தேவனுடைய அன்பும் வல்லமையும் உள்ளது. அந்தத் தண்ணீர் மூலமாக தங்கள் நோய்களில் இருந்து மக்கள் சுகம் பெற்றுள்ளனர். அந்தக் கிரியைகள் மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் கூட நடைப்பெற்றுள்ளது. எண்ணற்ற சாட்சிகளில் நாம் 10 சாட்சிகளைப் பார்ப்போம்.

## கொரியாவிற்கு வெளியே



### "பத்து வருட காத்திருப்புக்கு பின்னர் இறுதியாக நான் கருத்தரிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன்"

**மஸ்க்ராட் அஸிவ்**, புதிய அப்போஸ்தல சபை, பாகிஸ்தான்

நான் மிகவும் நொந்துபோய் இருந்தேன், காரணம் பத்து ஆண்டுகளாக என்னால் குழந்தை பெற முடியவில்லை. எனது கணவரும் நானும் பல செய்முறைகளை கருத்தரிக்கும்படிக்கு முயற்சித்தோம். ஆனால் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. அதே வேளையில், நான் மூவான் மதுர தண்ணீர் குறித்தும் அதன் மூலமாக அடையப்பெற்ற பல கிரியைகளைக் குறித்தும் கேள்விப்பட்டேன். நான் அதை விசுவாசத்தோடு குடித்தால் என்னாலும் குழந்தையை கருத்தரிக்க முடியும் என்ற நிச்சயமிருந்தது. நான் அதைக் குடித்து ஜெபித்தேன். இறுதியாக நான் கர்ப்ப வதியாகும் ஆசீர்வாதத்தை பெற்று ஒரு ஆரோக்கியமான பையனை பெற்றெடுத்தேன்.



### "எனது மகன் சரும வியாதியிலிருந்து சுகமானான்"

**மருத்துவர். டேனியல் ஃபுயன்டஸ்** அகோஸ்டா & மகப்பேறு மருத்துவர், மெக்சிகோ

எனது மகன் தானியேலுக்கு அவனது பிறவி முதலே கை கால்களில் சரும வியாதியிருந்தது. நான் தென் கொரியாவிலிருந்து வந்த WCDN (World Christian Doctors Network) பணித்தள பயணக் குழுவினரைச் சந்தித்தபோது மூவான் மதுர தண்ணீர் குறித்து கேள்விப்பட நேர்ந்தது. அவர்கள் ஒரு நபர் மூவான் மதுர தண்ணீரை விசுவாசத்தோடு தடவினாலோ அல்லது குடித்தாலோ அவனோ அல்லது அவளோ தெய்வீக சுகத்தின் கிரியையை அனுபவிக்க முடியும் என்றார்கள். நான் தண்ணீரை தடவி ஜெபித்தேன். ஆச்சர்யமாக அதே வாரத்தில்தானே தானியேல் முற்றிலும் சுகமானான்.



### "நான் வாயு தொல்லையிலிருந்தும் பனிபத்திலிருந்தும் சுகம் பெற்றேன்; சிறந்த கண் பார்வையையும் பெற்றுக்கொண்டேன்"

**மியாகே சிம்மோடைய்ரா**, ஐடா மான்மின் சபை, ஜப்பான்

மூவான் மதுர தண்ணீர் குடித்த பின்னர் நான் வாயு தொல்லையினால் ஏற்படும் வலியிலிருந்து விடுதலையானேன். முந்தைய பனி காலத்தில் எனது பத்து கால் விரல்களிலும் பனிபத்தினால் கஷ்டப்பட்டேன். அவற்றில் இரத்தம் வடிந்ததால் என்னால் நடக்கமுடியவில்லை. ஆனால் வியாதியஸ்தருக்கான அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெற்று, மூவான் மதுர தண்ணீர் குடித்த பின்னர், நான் சுகமானேன். மேலும், நான் சிறந்த கண் பார்வையை பெற்றுக்கொண்டேன். ஐந்து வருடங்களுக்கு முன்பாக நான் கண் அறுவை சிகிச்சையை செய்து கொண்டேன். கொடுக்கப்பட்ட கண் சொட்டு மருந்திற்குப் பதிலாக நான் தொடர்ந்து உறுதியாய் மூவான் மதுர தண்ணீரை பீச்சி அடித்தேன். பின் எனது கண் பார்வை **0.6**லிருந்து **1.5**க்கு முன்னேறியது.



### "உடைந்த கழுத்தெலும்பிலிருந்து நான் சீர்நிலை பெற்றேன்"

**பெஞ்சமின் டெப்ரேய்**, பிரான்ஸ்

எனது குடும்பம் மற்றும் நண்பர்களுடன் நான் கால்பந்து விளையாடிக் கொண்டு இருக்கையில், நான் கீழே விழுந்து எனது கழுத்து எலும்பை முறித்துக் கொண்டேன். நான் மிகவும் வேதனையுற்றிருந்தேன். ஆனால் மான்மின் மத்திய திருச்சபையின் இணையதளத்தில் (www.manmin.org/foreign/main_fr.asp) பதிவு செய்யப்பட்டுள்ள அறிவர். லீ அவர்களது வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். மேலும் நான் மூவான் மதுர தண்ணீரைக் குடித்து உடைந்த என் எலும்பின்மீது தெளித்தேன். வலி உடனடியாக போய்விட்டது! என்னுடைய தோள்பட்டையை என்னால் அசைக்க முடிந்தது. இது ஆச்சர்யமாக இருந்தது!



### "கடினமான பிரசவத்தினால் மரித்துக் கொண்டிருந்த கன்றுக்குட்டி உயிர்பெற்றது"

**ஜெயமேரி**, சென்னை மான்மின் திருச்சபை, இந்தியா

எனது வீட்டில் உள்ள மாடு கன்றுக்குட்டியை ஈன்றுக் கொண்டிருந்தது. அது கடினமான பிரசவம். கன்றுக் குட்டி பாதி பிரசவத்தில் நின்றுவிட்டது. இப்படிப்பட்ட ஒன்றை நான் இதுவரையும் அனுபவித்ததில்லை; அருகாமையில் கால்நடை வைத்தியர் யாரும் இல்லை. என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தேன். என்னை சுற்றியிருந்த மக்கள் கன்று சற்று நேரத்தில் மரித்துவிடும் என்று கூறினர். திடீரென்று நான் எனது திருச்சபையிலிருந்து கொண்டு வந்திருந்த மூவான் மதுர தண்ணீர் என் மனதில் வந்தது. நான் மாட்டிற்கு மூவான் மதுர தண்ணீர் கொடுத்தேன். அது கன்றுக்குட்டியைப் பாதுகாப்பாக ஈன்றது, ஹலேலூயா!

## கொரியாவிற்கு உள்ளே



### "நான் முதுகு தண்டுவட நகர்விலிருந்தும் இரத்தக் கட்டியிலிருந்தும் சுகம் பெற்றேன்"

**கண்காணி டேஜின் ஹியோ**, மாகாணம் 1

சில வருடங்களுக்கு முன்னதாக, எனது சுண்டு விரல் நான்கு மடங்கு அளவிலான இரத்தக்கட்டினால் பாதிக்கப்பட்டது. ஆனால் நான் மூவான் இடத்தில் உள்ள மூவான் மதுர தண்ணீரில் மூழ்கி எழுந்திருந்த போது, நான் சுகமானேன். ஜூலை 2014ல் முதுகு தண்டுவட நகர்வு எனக்கு இருக்கிறது என கண்டறியப்பட்டேன். மீண்டுமாக நான் மூவான் மதுர தண்ணீர் இடத்திற்குச் சென்றேன். வேதத்தில் நாகமான் செய்ததுபோல குளத்தில் ஏழு தரம் முங்கி எழுந்தேன். அதிலிருந்து என் வாழ்வில் எனக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லை.



### "அவிந்த புண் பகுதி எல்லாம் தீவிரமாய் குணமாயின"

**மூத்த கண்காணியை சுன்ஜா பார்க்**, மாகாணம் 14

சமைக்கும்போது, எனது தொடையிலும் மூட்டிலும் கொதிக்கிற சூப்பை தெரியாமல் கொட்டி விட்டேன். நான் அவிந்த புண் பகுதியிலே மூவான் மதுர தண்ணீரை ஊற்றினேன். அதன் பின் வலியெல்லாம் போய்விட்டது. ஆனால் மற்றவர்கள் நான் செய்ய வேண்டும் என எனக்கு ஆலோசனை சொன்னபடி, நான் ஐஸ் ஒத்தடம் கொடுத்தேன். அப்போது மீண்டும் எனக்கு மிகவும் வலி ஏற்பட்டது. அதனால் நான் மீண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூவான் மதுர தண்ணீரை ஊற்றினேன். பின் வலி மறைந்நதது; குளுமையையும் உணர்ந்தேன். மேலும் பின் துயர்ச்சி ஏதும் இல்லாமல் அதிலிருந்து நான் சுகமானேன்.



### "நான் முடி கொட்டுவதை குறித்து இனி கவலைப்படுவதில்லை"

**கண்காணியை மிஜா ஜூ**, மாகாணம் 7

நான் ஒரு பெண். ஆனால் நான் முன் தலையில் முடி உதிர்வதிலிருந்து கஷ்டப்பட்டேன். நான் அதைக் குறித்து கவலைப்பட்டேன். என்னோடு வசிப்பவர் ஒருவர் மூவான் மதுர தண்ணீரைக் குறித்து விளக்கி அதை என் தலையிலே தெளிக்கும்படி என்னிடம் கூறினார். நான் அதை சபையில், வீட்டில் எங்கு இருந்தாலும் விசுவாசத்தோடு தெளித்தேன். என் முடி வளர்வதற்காக ஜெபித்தேன். ஆறே மாதங்களுக்குள்ளாக எனது முன்தலையில் நிறைய முடி வளருவதை நான் பார்க்க முடிந்தது. இப்போது, கண்ணாடியில் நான் என் முடியை பார்க்கும்போது நான் மிகவும் சந்தோஷமாய் இருக்கிறேன்.



### "நான் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை இல்லாமலே இரட்டை இமைகளை பெறலானேன்"

**கண்காணியை யுன்மி கிம்**, மாகாணம் 1

நான் விசுவாச வாழ்வில் துவக்க நிலையில் இருந்தபோது என்னுடைய சிநேகிதி அவளது சாட்சியைக் குறித்து என்னோடு பேசினாள். அவள் தலைமைப் போதகர் அறிவர். லீ அவர்கள் அவருடைய செய்திக்குப் பின் மேடையிலிருந்து ஏறெடுத்த வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை பெற்றுக்கொண்டபோது, அவள் பெற வேண்டும் என விரும்பிய அழகான இரட்டை இமைகளைப் பெற்றுக் கொண்டாள் என்று கூறினாள். நானும்கூட அழகான இரட்டை இமைகளை பெற வேண்டும் என்ற இதய வாஞ்சையோடு அவருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அவரது ஜெபத்தின் மூலமாக, ஒரு கண்ணில் மட்டுமே நான் இரட்டை இமைகளைப் பெற்றுக்கொண்டேன். மற்றொரு கண்ணிலே நான் மூவான் மதுர தண்ணீரைப் பூச, அழகான இரட்டை இமை ஒன்று உருவானது. ஹலேலூயா!



### "மூவான் மதுர தண்ணீர் மூலமாக எனது குடும்ப அங்கத்தினர்களின் பிரச்சனைகள் தீர்ந்தன"

**சகோதரி ப்யோல் கிம்**, இளம் வாலிபர் பணித்தளம்

என்னுடைய பாதத்தில் தடிப்பான தோல் வளர்ந்தது. அது பெரிதாக வளர்ந்ததால் எனக்கு காலணிகளை அணிந்து நடந்து செல்வது மிக கடினமாயிற்று. நான் தலைமை போதகருடைய ஜெபத்தை தானியங்கி பிரதியுத்திர கருவி மூலமாக பெற்றுக்கொண்டேன் (822–830–5320). எனது காலை மூவான் மதுர தண்ணீருக்குள்ளாக முங்கச் செய்தேன். பின்னர் அந்த தடித்த பகுதி மென்மையாக மாறி முற்றிலுமாய் மறைந்து விட்டது! எனது சகோதரி கண் கோளாரிலிருந்து சுகம் பெற்றாள். எனது தாய் பயங்கரமான சரும சிரங்கிலிருந்தும் சுகம் பெற்றார்கள். எனது பாட்டி மரித்துக் கொண்டிருந்த பெர்சிமோன் மரத்திலே தண்ணீரை தெளித்தார்கள். அது உயிர் பெற்றது.

GCN
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

